2011 செப்டம்பர் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பொன்விழா ஆண்டு ஆகும். பொன்விழா ஆண்டை முன்னிட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டங்களின் மனை, வீடு, அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 3 விழுக்காடாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம், சென்னை நந்தனத்தில் 15.78 மனை நிலம் உள்ளது. நந்தனத்தில் அலுவலகக் கட்டடங்களுக்கான தேவை உள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் வசம் தற்போது காலியாக உள்ள இடத்தில் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் பசுமைத் திட்ட அம்சங்களுடன் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 17 மாடிகள் கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கட்டடத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக வாடகைக்கு விடுவதன்மூலம் கிடைக்கும் வருவாயைக்கொண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—05

4. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீண்ட தொலைநோக்குப் பார்வையோடு சென்னைக்கு ஒரு துணை நகரமாக விளங்குகிற வகையிலே, சென்னை—பெங்களூரு நெடுஞ்சாலையிலே, திருமழிசையைப் மையப்படுத்தி ஒரு துணை நகரம்

உருவாக்குவதற்கு இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். டில்லி, புது டில்லியைப்போல, ஹைதராபாத், செகந்தராபாத்தைப்போல, மும்பை, Greater மும்பையைப்போல, சென்னைக்கு ஒரு துணை நகரமாக விளங்கும் வகையில், மிக நீண்ட தொலைநோக்கோடு 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகள் கட்டுகிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கி இருக்கிற இந்தத் திட்டத்தை, நான் மகிழ்ச்சியோடு வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரக்கூடிய சென்னையில் ஏற்பட்டு வருகின்ற இடநெருக்கடியைப் போக்கக்கூடிய வகையிலும், அதேபோல வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டும், ஒரு புதிய துணை நகரத்தை உருவாக்கக்கூடிய தமிழக அரசினுடைய நடவடிக்கையைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் வீடு கொடுக்க வேண்டுமென்ற தூய எண்ணத்தில் தமிழக ஆட்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களையெல்லாம் காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகி வரும் மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டும், அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற வகையிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய திட்டம் வரவேற்கக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இந்த நல்லாட்சியிலே உணவுக்காக விலையில்லாத அரிசியை இந்த அரசாங்கம் அறிவித்து அதை மக்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல உறையுள் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்காக வேண்டிதான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் எல்லாம் இயங்குகின்றன. சென்னை நகரத்தினுடைய மக்கள் பெருக்கத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்தத் துணை நகரம் அமைக்கக்கூடிய திட்டத்தை மனித நேய மக்கள் கட்சி மனமார வரவேற்கிறது. வீட்டு வசதி மானியக் கோரிக்கையின்போது எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டு வசதி வாரிய வீடுகளிலே இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை விடுத்தார். அதை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கருணையுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று சதவிகிதம் மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டு வசதி வாரிய வீடுகளிலே இட ஒதுக்கீடு தரப்படும் என்ற அறிவிப்பை நெஞ்சார, மனமார வரவேற்று, வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே 110 விதியின்கீழ் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பில், விரிவடைந்து வரக்கூடிய சென்னை மாநகரத்தில் குடிசைகளே அல்லாத, குடிசைகளில் வாழாத மக்களுக்கு வீட்டு மனைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நீண்ட ஒரு* concept *அடிப்படையில் அறிவித்திருப்பது என்பது பாராட்டுதலுக்குரிய, வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

சென்னை பெங்களூரு சாலையில் 2,160 கோடி ரூபாய் செலவில் 311 ஏக்கர் பரப்பளவில் ஒரு துணைக் கோள் நகரம் அமைக்கப்படும்; 12 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது சென்னையில் வாழக்கூடிய மக்களுக்கு மட்டுமல்லாமல், நான் இருக்கக்கூடிய கோவை மாநகரத்திலும் இப்படிப்பட்ட அடுக்குமாடிகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், அதுவும் விரிவடைந்து, வளர்ந்து வரக்கூடிய நகரமாக இருந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11—10

அங்கேயுள்ளவர்களுக்கும் இப்படிப்பட்ட அறிவிப்புகளை அறிவிப்பார்களேயானால், தமிழக மக்கள் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுவார்கள்; வாழ்த்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அடுத்த முறையாவது நினைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கக்கூடிய இந்த நடவடிக்கை என்பது, பாராட்டுதலுக்குரியது; வாழ்த்துதலுக்குரியது. தமிழகத்தில் அறிவித்திருக்கக்கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம் மட்டும் அல்ல; இப்போது புதியதாக அறிவித்திருக்கக்கூடிய திட்டமும் மக்கள் மத்தியிலே நல்ல மதிப்பைப் பெறும். எனவே, தமிழகம் வளர்ச்சியை நோக்கிச் செல்லக்கூடிய அடிப்படையில் வந்திருக்கக்கூடிய ஒரு திட்டமாக இதைக் கருதி, வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம்; (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தினுடைய ஏழை மற்றும் நடுத்தர மக்களுடைய தீராப் பசியாக இருக்கிற வீடு என்கிற அந்த ஏக்கம், நகரத்திலே பணியாற்றக்கூடிய ஏழை எளிய மக்கள், 2 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்தால்தான் ஒரு அறை, ஒன்றரை அறை கிடைக்கும் என்கிற நிலையிலே, திருமழிசை நகரம் மகிழ்ச்சி தருகிறது. அதைச் சுற்றித்தான் ஸ்ரீபெரும்புதூர் தொழிற் பேட்டை, மற்றவை எல்லாம் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளிகள் வாடகைக் கொடுக்கமுடியாமல் அவதிப்படுகிற இந்தச் சூழ்நிலையில், அங்கே இப்படிப்பட்ட ஒரு பெரிய

நகரத்தை உருவாக்குவது என்பது அநேகமாக தமிழகத்தில் இதுவரை நாம் உருவாக்கியிருக்கக்கூடிய குடியிருப்புகளிலேயே இதுதான் மிகப் பெரிய குடியிருப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 12 ஆயிரம் குடியிருப்புகள் என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு பெரிய எண்ணிக்கையிலே இங்கே வந்திருக்கிறது. இந்த வீடுகள் ஏழை, நடுத்தர மக்களுக்குக் கிடைக்கிறபோது, வீடற்றவர்களுக்கு வாடகையில் இப்போது இருக்கிற அழுத்தம் அல்லது வாடகை இப்போது இருப்பதைவிட கூடாமல் போகிற ஒரு நிலைமை, நிச்சயமாக ஏற்படும். அந்த வகையிலே, வீடு கட்டும் இந்தத் திட்டங்கள், பசியோடு இருந்தவனுக்கு பானைச் சோறு எதிரே கிடைத்ததைப்போல ஒரு பெருமகிழ்ச்சியைத் தருகிற ஒரு திட்டம். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கூறும்போது, இந்தத் திட்டம் கோயம்புத்தூருக்கும் வேண்டுமென்று சொன்னார்கள். கோயம்புத்தூரிலே மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டிலே பிள்ளையார்புரத்திலே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டி, அதிலே சிறப்பாக, நல்லபடியாக இன்றைக்கு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட வீடுகளெல்லாம் இன்றைக்கு மண்ணுக்குள் மண்ணாகப் புதைந்துபோய் இருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூரின் அனைத்து வளர்ச்சிக்கும் அம்மாதான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு

சதவிகிதத்தை, 3 சதவிகிதமாக மாற்றி, மாற்றுத் திறனாளிகளுக்காகத் தான் என்றென்றும் இருக்கின்றேன் என்பதை உறுதிசெய்யும் பொருட்டு, மாற்றுத் திறனாளிகளுக்காகக் குடியிருப்புகள் ஒதுக்கித் தந்திருப்பதற்காக மாற்றுத் திறனாளிகளின் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, நன்றி, அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற மூன்றும் ஒவ்வொரு மனிதனின் அத்தியாவசியத் தேவையாகும். இருக்க இடம் என்பது எட்டாத கனவாக இருந்து வந்ததை, நனவாக்க, மிகப் பெரிய ஓர் அறிவிப்பை வெளியிட்டு, உண்ண உணவும் கொடுத்து, உடுக்க உடையும் தந்து, இருக்க இடமும் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தகவல் கோரல்

திண்டுக்கல், குடிநீர்ப் பிரச்சினை, சாலை பழுது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் எழுப்பவிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல்லில் மூன்று குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. அதில், காவிரிக் குடிநீர்த் திட்டத்தில், 4 தினங்களுக்கு ஒருமுறை தண்ணீர் கிடைக்கிறது. காமராஜர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் கிடைப்பதற்கு 11 நாட்கள் ஆகின்றன. இந்த நகரத்திற்குத் தேவையானது 21 எம்.எல்.டி., தண்ணீர் ஆகும். இத்தகைய ஒரு சூழ்நிலையில், காமராஜர் நீர்த் தேக்கத்தை விரிவுபடுத்தி, ஆழப்படுத்தி, அதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்கினால், நகரத்திற்கு இன்னும் கூடுதலாக 5 எம்.எல்.டி., தண்ணீர் கிடைக்கும். அதேபோன்று, வைகை அணையிலிருந்து நேரடியாகக் குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டத்தின்மூலம் குறைந்தபட்சம் 5 எம்.எல்.டி., தண்ணீருக்காவது பொதுப் பணித் துறை நிருவாகம்